யாழ். நகர் மக்களுக்கென
வரவழைக்கப்பட்டது
ஜப்பானிய
சன்யோ காஸ் குக்கர்
(Sanyo-Gas Cooker)
தாராளமாகக் கிடைக்கின்றன
இறக்குமதிசெய்யப்பட்ட
அநேக பொருட்களுக்கு...
சி. சின்னத்துரை
அன் பிறதர்
யாழ்ப்பாணம். போன்: 284

பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 20 ஆனி: 22 றஜப்: 29 இதழ்: 144
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 6-7-78

மலிவு... மலிவு...
உங்கள் குழந்தைகளை
குதூகலப்படுத்த... இதோ
இறக்குமதிசெய்யப்பட்ட
வண்ணவண்ண, வகைவகையான
விளையாட்டுப் பொருட்கள்...
அற்புத உலகுக்கு உங்கள் குழந்தைகளை
அழைத்துச்செல்ல... நாடுங்கள்
சி. சின்னத்துரை
அன் பிறதர்
யாழ்ப்பாணம், போன்: 284

# "கடைக்குள் இருந்தபோதே சூட்டுச் சத்தம் கேட்டது!"

## குறுக்குவிசாரணையில்

### யோகநாதன் தொடர்ந்து சாட்சியம்

(கொழும்பு)

"சூட்' என்ற சத்தம் கேட்ட சமயத்தில் காரின் வலது பக்கமாக வந்தவர் என்னுடன் மோதுப்பட்டார். நான் கடைக்குள் ஓடிவிட்டேன். கடையில் இருந்தபோது சூட்டுச்சத்தம் கேட்டது. துரையப்பாவைத்தான் சுடுகிறார்கள் என்று நினைத்தேன்."

இவ்வாறு முன்னாள் யாழ். பல நோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குநர்களில் ஒருவரும் ஆனைப்பந்தி ஆலைச் சொந்தக்காரருமான திரு. ஞானமுத்து யோகநாதன் நேற்று துரையப்பா கொலை வழக்கில் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறினார்.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதவான் ஜே. எம்.ஏ. ஸோஸா முன்னிலையில் துரையப்பா கொலைவழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. தமிழ் ஜூரர்கள்முன் இவ்விசாரணை நடைபெறுகிறது.

ஆனைப்பந்தி ஆலைச் சொந்தக்காரரும், யாழ். பலநோக்குக் கூட்டுறவுச்சங்க முன்னாள் இயக்குநர்களில் ஒருவரான ஞானமுத்து யோகநாதன் சட்டத்தரணி ஜே. பி. செருபியின் குறுக்குவிசாரணையில் கூறியதாவது:

திரு. துரையப்பா யாழ். பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் தலைவராக இருந்தார். நான் அதன் இயக்குநர்களில் ஒருவராக இருந்தேன். இயக்குநர்சபைக் கூட்டம் நடைபெறும் நாட்களில் எனக்கு 10 ரூபா சம்பளம் தரப்படும். அதுதான் எனது வருமானம். அந்த அளவில்தான் திரு. துரையப்பாவுடன் எனக்குத் தொடர்பு இருந்தது. நான் துரையப்பாவின் வால்பிடியாக இருக்கவில்லை.

#### கையில் இருந்த பொருள்

சம்பவம் நடந்தபோது காரில் இருந்து நான் இறங்கியபோது முட்டுப்பட்டவர் கையில் என்ன வைத்திருந்தார் என்பது தெரியாது. அவருடைய முகம் ஞாபகமிருக்கிறது. 'சூட்' என்ற சத்தம் கேட்டபோது என்னுடன் மோதுப்பட்டார்.

சட்; அவர் கையில் பொருள் வைத்திருந்தது பற்றி அடையாள அணிவகுப்பின்போது ஏதும் கூறினீரா?

சாட்சி: ஞாபகமில்லை.

சட்; சம்பவம் நடந்து மூன்று மாதத்தின் பின் அடையாள அணிவகுப்பு நடந்ததால் மறந்துவிட்டீர். இப்போது மூன்று வருடத்தின் பின் ஞாபகத்திலிருந்து கூறுகிறீர்!

நீதிபதி: வேண்டுமென்றே மோதினீரா?

சாட்சி: இல்லை. காரிலிருந்து இறங்கும்போது மோதுப்பட்டேன்.

நீதிபதி: நேருக்கு நேரே மோதுப்பட்டீர்களா?

பதில்; அவதியில் இறங்கும்போது முட்டுப்பட்டு, நான் கடைக்குள் ஓடிவிட்டேன்.

#### நான் பந்தமில்லை

சட்டத்தரணி ஏ. மகேந்திரராசாவின் குறுக்குவிசாரணையில் சாட்சி கூறியதாவது;

திரு. துரையப்பா ஆளும் கட்சியின் ஆதரவாளராக இருந்தார். அவருக்கு ஆதரவாளர்களும் இருந்தனர். பலருக்கு அவர் உதவிசெய்தார். உதவி பெறுநவர்களின் எதிர்ப்பும் இருந்தது.

எனக்கு அவர் பதவி தரவில்லை. நான் இயக்குநர் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டேன் அரசியலிலும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலும் அவருக்கு எதிர்ப்பு இருந்தது தெரியாது. நான் அவரின் பந்தமில்லை.

சம்பவதினம் கோயிலுக்கு அரைமணி நேரம் பிந்தியே சென்றோம். மடத்துக் குந்தில் மூன்று பேர் இருந்தார்கள். கார் நிற்பாட்டப்படு முன்பே அவர்கள் எழுந்துவந்தார்கள். அதற்கு முன் அவர்களை அங்கு பார்க்கவில்லை. இது வழக்கத்துக்கு மாறானதாக இருந்தது. அவர்களை நான் நன்றாகப் பார்த்தேன். கையில் என்ன வைத்திருந்தார்கள் என்பது தெரியாது. காரின் வலதுபுறம் ஒருவரும் இடதுபுறம் இருவருமாக வந்தார்கள்.

'சூட்' என்ற குரல் கேட்டது. அப்போது வலதுபுறம் வந்தவர் என்னுடன் மோதினார். 'சூட்' என்ற குரல் கேட்டபோது துரையப்பா காரை விட்டு இறங்கிவிட்டார் ஆனால் அவர் என்ன செய்தாரென்று தெரியாது. 'சூட்' என்ற குரல் எனக்குப் பின்புறமிருந்துவந்தது. என்னுடன் மோதியவர் சத்தம் ஏதும் போடவில்லை. நான் விரைந்து கடைக்குள் ஓடிவிட்டேன். சூட்டுச்சத்தம் கேட்டபோது துரையப்பாவைதத்தான் சுடுகிறார்கள் என்று நினைத்தேன். கடையில் இருந்தபோதுதான் 'சூட்டு' சத்தம் கேட்டது.

நீதவான்: 'சூட்டு'ச் சத்தம் கேட்டபிறகுதான் கடைக்குள் ஓடியதாக பொலிசாரிடம் கூறினீரா?

பதில்: ஆம்.

நீதிபதி; இப்போது கடைக்குள் இருந்தபோதுதான் சூட்டுச்சத்தம் கேட்டது என்கிறீர்.

சட்டத்தரணி: சூட்டுச் சத்தம் கேட்டபோது கடைக்குள் ஓடினீர் என்பது உண்மைதானா?

பதில். இது நடந்து மூன்று வருடங்களுக்கு மேலாகிறதால் சொல்லமுடியவில்லை.

இதன்பின்னர் சட்டத்தரணி வி. என். நவரத்தினம் சாட்சியை குறுக்குவிசாரணை செய்தார்.

(6-ம் பக்கம் பார்க்க)

---

ஆழ்கடல் சென்ற

## யாழ். மீனவா நால்வர் கதி என்ன?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக்கடற்கரையில் இருந்து கச்சைதீவு நோக்கி ஆழ்கடலில் மீன் பிடிக்கச் சென்ற நான்கு மீனவர்கள் இன்னமும் கரை திரும்பவில்லை என அறிவிக்கப்படுகிறது.

கடந்த 28ம் திகதி ஜலாப்தீன், அகமத், ஓம்மான், ஆப்தீன் என்ற இந் நால்வரும் படகொன்றில் மீன்பிடிக்கச் சென்றிருந்தனராம்.

---

இந்தியா செல்லும் மாணவர்க்கு

## பாரபட்சமின்றி செலாவணி கிடைக்கும்

(கொழும்பு)

இந்தியாவில் படிக்கச் செல்லும் இலங்கை மாணவர்களுக்கு எதுவித பாரபட்சமுமின்றி வெளிநாட்டுச் செலாவணி வழங்கப்படும் என்று நேற்று நிதியமைச்சர் திரு. ரோனி டி மெல் தேசிய அரசுப் பேரவையில் உறுதியளித்தார்.

இந்தியா சென்று படிக்க விரும்பும் மாணவர்களுக்கு அந்நிய செலாவணி வழங்குவது தொடர்பாக நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் நேற்று ஒத்திவைப்புப் பிரேரணை கொண்டுவந்தபோதே மேற்படி உறுதிமொழியை அமைச்சர் தெரிவித்தார்.

இந்தியா சென்று படிக்க விரும்பும் மாணவர்கள், மாணவர்களுக்கான விசா மற்றும் தஸ்தாவேஜிகளை சமர்ப்பித்தால் அவர்களுக்கு எதுவித பாரபட்சமுமின்றி செலாவணி வழங்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார். (ம)

---

## 'இன ஒற்றுமைக்காக நான் பிரார்த்திக்கின்றேன்'

### யாழ். நகரில் கொழும்பு பேராயர் செய்தி

(யாழ்ப்பாணம்)

"கிறிஸ்தவ மக்கள் எப்பொழுதும் அன்பையும் சமாதானத்தையும் விரும்புபவர்கள். இதனையே ஆண்டவரும் எங்களுக்குக் கூறுகின்றார். இயேசுவின் இந்த நற்செய்தியை உங்களிடம் விட்டுச் செல்கின்றேன். கிறிஸ்தவர்கள் உண்மையான கிறிஸ்தவர்களாக வாழவேண்டும், ஆண்டவனுக்கு விசுவாசமாக இருக்கவேண்டும்" என்று நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்த கொழும்பு மறைமாநிலத்தின் பேராயர், பேரருட்திரு கலாநிதி நீக்கிலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ செய்தி விடுத்தார்.

யாழ். வருகை தந்த கொழும்பு பேராயருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

யாழ், ஆசனக் கோயிலின் பிரதான வாயிலில், பூரண கும்பம்வைத்து ஆரத்திஎடுத்து திலகமிட்டு, மாலை அணிவித்து மங்கள வாத்தியங்கள் முழங்க ஆசனக்கோயிலுக்கு அழைத்துச்செல்லப்பட்டார். விழா அமைப்பாளர் டாக்டர் ஜே. பி. சி. பிலிப்ஸ் பேராயருக்கு மாலை அணிவித்து வரவேற்றார்.

இந்த வரவேற்பு விழாவுக்கு யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு கலாநிதி வ. தியோகுப்பிள்ளை தலைமை வகித்தார். பேரருட்திரு கலாநிதி நீக்கிலஸ் பெர்னாண்டோ தொடர்ந்து தமது உரையில்;

"யாழ்ப்பாணத்துக்கு நான் வருவது இது மூன்றாவது தடவை. என்றாலும் நான் பேராயராசப்பட்டம் பெற்ற பின்னர் விஜயம் செய்வது இதுவே முதற்தடவை. நான் பதவியேற்ற மூன்றாவதுமாதத்

(6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

மின்சாரம், தண்ணீர் விநியோகம் உட்பட சகல நவீன வசதிகளும் கொண்ட விசாலமானவீடு ஒன்று யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அல்லது அதற்குச் சமீபமாக கொழும்பிலுள்ள தனியார் அபிவிருத்தி நிறுவனமொன்றின் கிளை அலுவலகத்திற்குத் தேவை. மாதவாடகை, முற்பணம் ஆகிய சகல விபரங்களையும் அறிவித்து தபால் பெட்டி எண் 16, தெகிவளை என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். 9696

பெண்களுக்கான உடைகள் தைப்பதற்கு திறமைவாய்ந்த பெண்கள் தேவை. நேரில் வரவும். S. V. P. சீலம் டெயிலரிங்மார்ட், 1, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம். 9719

### விற்பனைக்கு

இறைச்சிக்கான கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. P. Leonard பலாலி சந்தி, காங்கேசன்துறை. 9734

### ஸ்கந்தா விளையாட்டுப்போட்டி

(பண்டத்தரிப்பு)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுனர்போட்டி 15-ம் திகதி கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## ஆதனவரி அறிவித்தல்

### கிளிநொச்சிப் பட்டணம்

இத்தால் சகலருக்கும் அறியத்தருவது கிளிநொச்சிப் பட்டணசபைக்கு ஆதனவரியாகச் செலுத்துவோர் 2ம் காலாண்டு 1978க்கான வரிப் பணத்தை யூலை மாதம் 31ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இப் பட்டணசபையில் செலுத்தி பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். தவறின் செலுத்த வேண்டிய பணத்தில் 10வீதம் குற்றப்பணமாக அறவிடப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மூன்றும், நான்காம் காலாண்டுகளுக்கு ஆதனவரியாகச் செலுத்துவோர் முறையே செப்டெம்பர் 30க்கும் டிசம்பர் 31க்கும் முன்னதாக பணத்தைச்செலுத்தி பற்றுச்சீட்டைப்பெற்றுக்கொள்ள வேண்டும். தவறுவோர் மீது ஆதனவரியாக செலுத்த வேண்டிய பணத்தில் 10வீதம் குற்றப்பணம் அறவிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

விசேட ஆணையாளர்.

கிளிநொச்சிப்பட்டணம்.
விசேட ஆணையாளர் அலுவலகம்,
கிளிநொச்சிப் பட்டணம்,
கிளிநொச்சி.
4-7-1978. 9746

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல. ஈடு / 1602

(1) கனக சுந்தரம் முருகதாஸ்
தெல்லிப்பழை வடமேற்கு.
—வழக்காளிகள்

எதிராக

(1) அருளம்பலம் சதாசிவமும் பெண்
(2) நாகம்மாவும் வடசேரிப் பிள்ளையார் கோவிலடி,
பெரியவிளான், இளவாலை.
— எதிராளிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1978-ம் ஆண்டு ஆவணி மாதம் 10-ம் திகதி (10-8-78) வியாழக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிக்கு ரூபா 3600/- வும் மேலும் 2000/- க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1977ம் ஆண்டு தை மாதம் 7-ம் தேதியிலிருந்து தீர்வைத்திகதியாகிய 1977-ம் ஆண்டு மார்கழி மாதம் 2-ந் திகதி வரையுமான வட்டியும், அதன் பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 9 வீத வட்டியும், வழக்குச்செலவு ரூபா 482-85 கொடுக்கவேண்டியிருப்பதாலும், செலவு பணத்தில் ரூபா 200/- நீக்கி மிகுதி அறவிட வேண்டும்.

### குறித்த ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு பண்டத்தெருப்பு கோவிற்பற்று பெரியவிளான் இறை ''கட்டுப்பிலாளை'' நில. பர. ஏழும் (7) எல்லை கிழக்கு முருகேசு வயிரமுத்து பெண் சின்னப்பிள்ளைக்கும், மறு பேருக்கு முரிய வாதனங்கள், வடக்கு அருளம்பலம் சதாசிவத்துக்கும், பெண் நாகம்மாவுக்கும் முருகேசு பெண் நல்லம்மாவுக்கும் சந்தியாப்பிள்ளை பெண் அன்னேசம்மாவுக்கும் உரிய வாதனங்கள், மேற்கு அருளப்பா பெண் அருளம்மாவுக்கும் மறு பேருக்குமுரிய வாதனங்கள் தெற்கு சிவகுரு தம்பிராசாவின் ஆதனம். இதில் கிழக்கெல்லை யருகால் வடக்கெல்லையான எதிராளிகளின் காணிக்கு போக்கு வரவு செய்யும் மூன்று முழ அகலப்பாதை யுரித்தும் புறநீங்கலாக இதடங்கலும் கிழக்குப் புறமாக முருகேசு சிவகுருவின் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழமையான வழி வாய்க்கால் உரித்தும் இன்னும் தெற்கேயிருக்கும் றோட்டிலிருந்து தெற்குக் காணிகளின் கிழக்கெல்லையருகால் ஆறு முழ அகலப்பாதையுரித்தும். பதிவு E 435/2.

சி. ஆ. த. வடிவேலு, ஜே. பி.
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்,
விலைமதிப்பாளரும்.

''வடிவேல் உதயம்''
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில்.
12-6-78. 9744

## மந்துவில் கொலைவழக்கு:

# ''குறை உயிருடன் விடாதீர்கள் என்றுகூறி ஐயாவைத் தாக்கினார்கள்''

### மகள் தேவிகா சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''ஐயோ'' என்ற சத்தம் கேட்டது. வெளியில் வந்து பார்த்தேன் 2ம், 3ம் எதிரிகள் ஐயாவை இழுத்து சென்று அப்புவீட்டு படலையில் போட்டார்கள். பின் கொட்டனால் அடித்தார்கள்''

மந்துவில் கொலைவழக்கில் சாட்சியமளித்த கட்டிணன் மகள் தேவிகா மேற்கண்டவாறு கூறினார்.

இவ் வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல் காதர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. இவ் வழக்கில் மந்துவிலில் 76 மார்ச் 16ம் திகதி பாலன்பொன்னன் சின்னப்பொடி செல்வராசா, பொன்னன் தங்கராசா, பொன்னன் முருகன் ஆகியோர், சின்னத்தம்பி கிட்டினனைக் கொலைசெய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1ம், 2ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி கே. வி. எஸ். சண்முகநாதன் சட்டத்தரணி எஸ். கமலநாதன் சட்டத்தரணி செல்வி என் கதிரேசு ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். 3ம், 1ம், எதிரிகள் சார்பில் சட்டத்தரணி செ. அம்பிகைபாலன் சட்டத்தரணி செல்வி என். கதிரவேலுவின் அனுசரணையுடன் ஆஜரானார் அரச தரப்பில் சட்டத்தரணி ஜி. ஜெயக்குமார் ஆஜரானார்.

### மகள் சாட்சியம்

தேவிகா (15 வயது) சாட்சியமளிக்கையில்கூறியதாவது;

''இறந்தவர் என் தகப்பனார். சம்பவம் நடந்ததினம் நான் அடுப்படியில் இருந்தேன். 'ஐயோ' என்று சத்தம்கேட்டு வெளியில் வந்து பார்த்தபோது ஐயாவை 2ம் 3ம் எதிரிகள் கையில் பிடித்து நிலத்தில் இழுத்துச் சென்றனர். இருவரும் கொட்டன் வைத்திருந்தனர். தங்கராசாவின் கையில் பெரியகொட்டன் இருந்தது. அப்புவின் வீட்டு படலையில்என் ஐயாவை கிடத்திவிட்டு. இருவரும் தங்கராசா வீட்டை போனார்கள் பின்வந்து அடித்துவிட்டுப் போனார்கள். பிறகு 4 எதிரிகளும் வந்தனர். 3 பேர் கொட்டன் வைத்திருந்தனர். 1ம் எதிரி வீட்டிலிருந்து நாகம்மா, சின்னப்பிள்ளை ஆகியோர் வந்து 4 பேரையும் கூட்டிச் சென்றனர். 4ம் எதிரி திரும்பிவந்து ''குறை உயிருடன் விடாதீர்கள். என்று மற்றவர்களிடம் கூறினார். 4 எதிரிகளும் திரும்பி வந்தனர். 3ம் எதிரி இரும்பு பாரை வைத்திருந்தார். பிறகும் அடித்தார்கள். தலையிலும் அடி விழுந்தது. எத்தனை அடி என்று தெரியாது. ஐயா ஒன்றும் கதைக்கவில்லை. எதிரிகள் திரும்பிச்சென்று விட்டார்கள். 3ம் எதிரி பாரையை சின்னக்குட்டி வீட்டில் கழுவினார்.

சட்டத்தரணி கே. வி. எஸ். சண்முகநாதன் குறுக்கு விசாரணை செய்தார்.

சட்: பொலிஸ் இன்ஸ்பெக்டர் வீட்டிற்கு வந்தபோது சம்பவம் பற்றி கூறினீரா?- இல்லை.

சட்: இன்ஸ்பெக்டர் உங்கள் வீட்டிலேயே வாக்குமூலங்களை பதிவு செய்தார்?-இல்லை பொலிஸ் நிலையத்தில்.

நீதி: இன்ஸ்பெக்டருக்கு சம்பவம் பற்றி ஏன் சொல்லவில்லை?-என்னைக்கேட்கவில்லை.

சட்: வீட்டில் இன்ஸ்பெக்டரிடம் 4 எதிரிகளின் பெயரையும் சொல்லவில்லை?-இல்லை

சட்; உங்களை பொலிஸ் நிலையம் கூட்டிச் சென்றார்?- ஆம்.

சட்; அங்குதான் எதிரிகளின் பெயரை சொன்னீர்?-ஆம்.

சட்டத்தரணி செ. அம்பிகைபாலன் குறுக்கு விசாரணை செய்தார்.

சட்: உங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் 1ம் எதிரியின் வீடு?- ஆம்.

சட்: 3ம் எதிரி 1ம் எதிரியின் மகன்?-ஆம்.

சட்: இச்சம்பவம் மாடு தொடர்பாக நடந்தது?- ஆம்

சட்: அம்மாட்டுச் சம்பவம் பல மாதங்களுக்குமுன் நடந்தது?-கொஞ்ச நாட்களுக்கு முன்.

சட்: வட்ட விதானையார் வந்து மாட்டுப் பிரச்னையை தீர்த்துவைத்தார்?-ஆம்.

விசாரணை இன்று தொடர்ந்து நடைபெறுகிறது. (சு)

## கரபந்தாட்ட சுற்றுப் போட்டி

### இன்றைய மோதல்

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் ஞானவைரவர் சனசமூக நிலையம் மின்னொளியில் நடாத்திவரும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் ''பி'' பிரிவில் புத்தூர் ஐக்கிய வி. கழகம் தெல்லிப்பளை திருமகள் வி. கழகத்துடன் போட்டியிட்டு வெற்றி பெற்றது. நீர்வேலி ஐக்கிய வி.கழகமும் தொண்டமான் வி. கழகமும் போட்டியிட்ட மற்றுமொரு போட்டியில் ஐக்கிய வி. கழகம் வெற்றி பெற்றது வெற்றி பெற்ற இரண்டுகோஷ்டிகளும் பி- பிரிவு குறூப் சாம்பியன் போட்டியில் 9 -ம் திகதி இரவு மோதிக்கொள்ள விருக்கின்றன.

''சி'' பிரிவில் புன்னாலைக் கட்டுவன் பிளேயிங் ஈகிள்ஸ் வி. கழகம் வெற்றி பெற்று ''சி'' பிரிவு குறூப் சாம்பியன் போட்டியில் மோதவிருக்கிறது.

திருநெல்வேலி சிவன் வி. கழகத்திற்கும் காங்கேசன்துறை ஐக்கிய வி. கழகத்திற்குமிடையே நடந்த மற்றுமொரு போட்டியில் சிவன் வி. கழகம் வெற்றி பெற்றது. ''சி'' பிரிவு குறூப் சாம்பியன் போட்டியில் புன்னாலைக்கட்டுவன் பிளேயிங் ஈகிள்ஸ் வி. கழகத்துடன் இன்றிரவு மோதவிருக்கிறது.

**இன்று**

கரபந்தாட்ட 2-ம் வகை சுற்றுப்போட்டி 'பி' பிரிவில் இன்று பிற்பகல் குளமன்கால் சென் சேவியர் வி. க. வை எதிர்த்து மிரியன்காடு உதய தாரகை வி. க 'டி' யும் புளியங்கூடல் மகாமாரி வி.க ''ஏ''யைஎதிர்த்து தையிட்டி ஈஸ்வரி வி. க. வும் மாவை கலட்டி உதயதாரகை வி.க. வை எதிர்த்து காங்கேசன் துறை யங்ஸ்ரேயல் வி. க.வும் ஊறெழு ஸ்ரேயல் வி,க.வை எதிர்த்து பரித்தியடைப்பு சனசமூகநிலையமும் மோதுகின்றன.

## 'வள்ளல் திலகம்'

(யாழ்ப்பாணம்)

மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராஜாவுக்கு நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் 'வள்ளல் திலகம்' என்னும் பட்டமளித்து பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரியில் நடைபெற்ற பெற்றோர்தின விழாவிலேயே இப் பட்டமளிப்பு இடம்பெற்றது.

கல்லூரி பெற்றோர் ஆசிரியர் சங்கம், பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு உதவி அதிபர் திருமதி கிட்ணர் தலைமை வகித்தார். (கா-இ)

## நிதி ஒதுக்கப்பட்டது

(மட்டுவில்)

மட்டுவில் மகாவித்தியாலயத்தின் விவசாயப்பண்ணையின் அத்தியாவசிய தேவைகளுக்காக அரசாங்கம் ரூபா 5000ம் ஒதுக்கியுள்ளது.

இந்தப்பணத்தைக்கொண்டு பண்ணையின் சுற்றுவேலிகளை சீர்திருத்துவதோடு மாட்டெரு இரசாயனப் பொருட்கள், உரம் விதைதானியங்களையும் கொள்வனவுசெய்யவுள்ளதாக வித்தியாலய அதிபர் திரு. என். மனோகரன், பெற்றோர்ஆசிரியர் சங்கத்தின் மாதாந்தக்கூட்டத்தின்போது தெரிவித்தார்.

பாடசாலைக்கு மின்னொளி தொலைபேசி அமைக்கப்படுவது அவசியம் என்றும் ஒரு விவசாயப்பட்டதாரி ஆசிரியரும், விளையாட்டுத்துறை ஆசிரியரும் அத்தியாவசியம் தேவையென்றும் இவற்றைத் தொகுதி எம். பி. உடனடியாகக் கவனிககவேண்டும் என்று கூறும் தீர்மானம் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. (அ)

## சுகாதாரக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி தெய்வேந்திரா படமாளிகையில் சுகாதாரக் கருத்தரங்கு நாளை காலை வைத்தியகலாநிதி செல்வி ச. சின்னத்துரை தலைமையில் நடைபெறவிருக்கிறது.

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்ணர் உட்பட பலர் சிறப்புரை நிகழ்த்துவர்.

தேசிய சுகாதாரவாரவிழா சாவகச்சேரி டிறிபேக்கல்லூரியில் அன்று பிற்பகல் வைத்தியகலாநிதி ச. சின்னத்துரை தலைமையில் நடைபெறும். சாவகச்சேரி எம்.பி. திரு. வி. என். நவரத்தினமும் கலந்துகொள்வார். (உ)

## யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

மேற்படி சங்கத்தின் பழைய மாணவர் தினமும் வருடாந்தப் பொதுக்கூட்டமும் 8-7-78 சனிக்கிழமை நடைபெறும்.

### நிகழ்ச்சி

| | | |
|---|---|---|
| காலை | 8-00 மணி | கிரிக்கட் போட்டி |
| | | கல்லூரி மாணவர்களுக்கு இயல் இசைப் போட்டிகள் |
| மத்தியானம் | 12-15 | மதிய உணவு |
| மாலை | 3-00 மணி | நன்றி நவிலல் ஆராதனை |
| ,, | 3-30 மணி | வருடாந்தப் பொதுக்கூட்டம் |
| ,, | 4-30 மணி | அதிபர் தேநீர் உபசாரம் |

க. குணரத்தினம்
கௌரவ செயலாளர்.

வட்டுக்கோட்டை,
6-7-1978 9748

ஈழநாடு
The Eelanaadu

## ஆசிரிய நியமனம்

கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் (ஜி. ஸி. ஈ. உயர்தரம்) சித்தியடைந்தவர்களுக்குத்தான் ஆசிரிய நியமனம் கிடைக்குமென்று கல்வி அமைச்சர் அறிவித்திருக்கிறார். ஜி. ஸி. ஈ. சாதாரண பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்கும் இன்றைய நடைமுறை இனிமேல் பின்பற்றப்படமாட்டாது. ஜி. ஸி. ஈ. உயர்தரம் சித்தியடைந்தவர்களுக்கே ஆசிரிய நியமனம் வழங்கும் திட்டம் அடுத்தவருடம் ஜனவரி மாதத்திலிருந்து அமுலுக்கு வரவிருக்கிறது.

கடந்த சில ஆண்டுகளாக நமது நாட்டின் கல்வித்தரம் கீழிறங்கி வந்துள்ளதையிட்டுக் கவலையடைந்தவர்களுக்கு கல்விஅமைச்சரின் இந்தப் புதியதிட்டம் ஓரளவு மனத்திருப்தியளிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

சென்ற சில ஆண்டுகளுக்குள் ஆசிரிய நியமனத்தில் பல குளறுபடிகள் நிகழ்ந்திருக்கின்றன. ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சையில் சித்தியடையாதவர்களுக்குக் கூட ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டதாகப் புகார்கள் தெரிவிக்கப்பட்டன.

தகுதியும் தராதரமும் உள்ளவர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டால்தான் கல்வியின் தரத்தைப் பேணமுடியும். ஜி. ஸி. ஈ. (உயர்தரம்) பரீட்சையில் சித்தியெய்தியவர்களுக்கே ஆசிரியநியமனம் வழங்குவதென்ற கல்விஅமைச்சின் தீர்மானம் கல்வியின் தரத்தைப் பேணுவதற்குப் பெரிதும் உதவும் என்பது உண்மையே. இதேசமயம் ஜி. ஸி. ஈ. (உயர்தரம்) பரீட்சையில் சித்தியெய்தியும் உயர்படிப்புப் படிப்பதற்காகப் பல்கலைக்கழக அனுமதிபெற முடியாதவர்கள் ஆசிரியத்தொழிலை மேற்கொள்வதற்கும் இந்திட்டம் நல்ல தொரு வாய்ப்பை அளிக்கிறது.

ஆசிரியர் பற்றாக்குறை இனனமும் நமது நாட்டில் பிரச்னையாகவே இருந்து வருகிறது. வருடா வருடம் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள்பலர் ஓய்வு பெற்று வருகின்றனர்; இவர்களின் இடங்களை நிரப்பவேண்டும். இதே நேரம் மக்கள் தொகைப் பெருக்கத்துக்கு ஏற்ப கல்வி கற்கும் பிள்ளைகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.

மாணவர்களின்தொகைக்கேற்ப ஆசிரியர்களின் தொகையும் அதிகரிக்க வேண்டும். இந்த வகையில் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கப் பெறாத ஜி. ஸி. ஈ. (உயர்தரம்) சித்தியெய்தியவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதற்குத் தாம் தயாராக இருப்பதாக கல்வி அமைச்சர் தெரிவித்திருப்பதும் வரவேற்கத்தக்கது.

ஆசிரியர் இடமாற்றங்களில் நிகழ்ந்த ஒழுங்கீனங்களும் திட்டமெதுவுமில்லாத இடமாற்றங்களுமே சிலபாடசாலைகளில் தேவைக்கு அதிகமான ஆசிரியர்களும்மற்றும் பல பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறையும் இருப்பதற்குக் காரணமாகும்.

இதுபற்றியும் விபரம் சேகரித்து தேவைக்கதிகமான ஆசிரியர்கள் உள்ள பாடசாலைகளிலிருந்து சில ஆசிரியர்களைப் பற்றாக்குறையான பாடசாலைக்கு மாற்றம் செய்ய கல்வியமைச்சர் உத்தேசித்திருப்பதும் வரவேற்கக்கூடியது.

ஆசிரிய நியமனங்கள், இடமாற்றங்களில் அரசியலுக்கு இடமளிக்காமல் தகுதிக்கு மட்டுமே இடமளித்தால் பிரச்னைகள் தலைதூக்கமாட்டாதென்று நிச்சயமாக நம்பலாம்.

'சண்' தலைமையை நிராகரிக்கக்கோரி

# சீன கம். கட்சி வடபிரதேச செயலாளரும் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கை (சீனசார்பு) கம்யூனிஸ்ட் கட்சியில் நா. சண்முகதாசனின் தலைமையை நிராகரித்து கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள், கட்சிப் பிரதேசக் குழுக்கள், கட்சிக் கிளைகள் சார்பாக சமல் த சில்வா, கே. ஏ. சுப்பிரமணியம் ஆகிய இருவராலும் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையைத் தான் பூரணமாக ஆதரிப்பதாக இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும், கட்சியின் வடபிரதேசக் குழுவின் செயலாளருமான கே. செந்திவேல் பத்திரிகைகளுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அறிக்கை மேலும் கூறுவதாவது:-

''சண்முகதாசனின் தலைமையை நிராகரிப்பதற்கு சமல் த சில்வா, கே. ஏ. சுப்பிரமணியம் ஆகியோரால் வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ள ஏழு காரணங்களும் சரியானவையும் நியாயமானவையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. பலமான கட்சியைக் கட்டியெழுப்பத் தவறியமை, ஐக்கிய முன்னணியை உருவாக்க மறுத்து வந்தமை தமிழ் மக்கள் பிரச்னையில் தவறான அணுகுமுறைகளை மேற்கொண்டமை, கட்சி நலன்களுக்கு மேலாகத் தனது சொந்த நலன்களை முன்வைத்தமை, தலைவர் மா ஓவினால் முன் வைக்கப்பட்ட மூன்று உலகக் கோட்பாட்டை நிராகரித்து மாசேதுங் சிந்தனையை நிந்தனை செய்தமை, சீனவிரோதப் பாதையை மேற்கொண்டு சோவியத் சமூக ஏகாதிபத்தியத்திற்கு உதவ முன்வந்தமை போன்ற காரணங்களுக்காக சண்முகதாசன் கடும் குற்றவாளியே. கடந்த பதினைந்து வருடங்களில் திருந்தி நடப்பவர் போல் நடித்துக்கொண்டு நடைமுறையில் திருந்த மறுத்து வந்த சண்முகதாசனின் தலைமையை நிராகரித்துகட்சியையும் அதன் வெகுஜன ஸ்தாபனங்களையும் பாதுகாத்து மார்க்சிசம்-லெனினிசம்-மாசேதுங் சிந்தனை அடிப்படையில் தொடர்ந்தும் முன்னேறவேண்டும்''.

### செங்கொடிச்சங்க உபசெயலாளர் அறிக்கை

''இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் தவறான நிலைப்பாட்டை எடுத்து கட்சியையும் அதன் தொழிற்சங்க இயக்கத்தையும் சீரழித்து வந்தமைக்காகவும், தலைவர் மாஓவினால் முன்வைக்கப்பட்ட மூன்று உலகக் கோட்பாட்டை நிராகரித்து சீன விரோத நிலைக்குச் சென்றமைக்காக சண்முகதாசனின் தலைமையை நிராகரித்து மத்தியகுழு உறுப்பினர்கள் சார்பாக சமல் த சில்வா, கே. ஏ. சுப்பிரமணியம் ஆகியோரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையை நான் முழு மனதுடன் வரவேற்கின்றேன்'' என்று மேற்படி கட்சியின் மத்தியகமிட்டி உறுப்பினரும் புதிய செங்கொடிச்சங்கச் செயலாளருமான திரு. கே. சுப்பையா விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

''கடந்தகாலத்தில் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் தொழிற்சங்க இயக்கத்தை ஒரு பணம்சேர்க்கும் வியாபார ஸ்தாபனமாகவே சண்முகதாசன் நடத்திவந்தார். அவரது தவறான அரசியல் மார்க்கத்தை எதிர்த்தவர்களும், தோட்டத் தொழிலாளர்களை அரசியல் ரீதியாக வளர்க்க முயன்றவர்களும் அநீதியான முறையில் வெளியேற்றப்பட்டுவந்துள்ளனர்.

ஆகவே, பல்வேறு கஷ்டங்களுக்கும் அடக்கு முறைகளுக்கும் மத்தியில் மகத்தான தலைவர் மாசேதுங் அவர்களின் சிந்தனைகளை முன்னெடுத்து வந்த புதிய செங்கொடிச் சங்க உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் சண்முகதாசனின் தலைமையை நிராகரிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்'' என திரு. சுப்பையா தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

''கொல்லப்பட்ட கணவருக்கு

# சிகிச்சை அளிக்கவில்லை ஆனல் அரசு செலவில் அடக்கம்''

## சன்சோனி விசாரணையில் விதவை முத்துலட்சுமி சாட்சியம்

(கண்டி)

'இருளில் வந்த குண்டர்கள் என் கணவரை நீ தமிழனா? சிங்களவனா? என கேட்டு அதட்டினர். அடுத்து என் கணவரின் 'ஐயோ' என்ற அலறல் கேட்டது'

இவ்வாறு கண்டியில் நடைபெற்றுவரும் சன்சோனிக் கமிஷன் விசாரணையில் ஆறுமுகம் முத்துலட்சுமி (வயது 47) என்னும் பெண்மணி சாட்சியமளிக்கையில் கூறினார்.

அவர் எமது சாட்சியத்தில் மேலும் சொன்னதாவது: 'தியத்தலாவ மாலகதிர்காமம் என்னும் இடத்தில் நான் வசித்து வருகிறேன். 20-8-77 மாலை எனது மகன் ரவீந்திரன் தியத்தலாவை கடை வீதிக்குச் சென்றுவிட்டுத் திரும்பினார். வந்தவன், சுப்பிரமணியம் ஸ்ரோசையும் இன்னொரு கடையையும் இராணுவத்தினர் உடைத்து நொறுக்கின்ர். பொருட்களை அள்ளி வெளியே வீசினார்கள், இதை கண்ணால் கண்டேன் என்றான்.

அன்றிரவு 7 மணிக்கு என் வீட்டின் மீது கற்கள் விழுந்தன. கோஷ்டியாக வந்தவர்கள் என் கணவரைக் கேட்டனர். என் கணவர் வர்த்தகராவார். கணவர் கடையைத் திறக்கவில்லை. வந்தவர்கள் சிகரெட் இருக்கிறதா எனக் கேட்டனர். எனது கணவர் அமைதியாக இருந்தார். வந்த கூட்டத்தினர் தனிப்பட்ட முக்கிய விஷயமொன்று இருக்கிறது வெளியே வா என என்கணவரை அழைத்தனர்.

இச்சமயத்தில் எனது மகன் 'டோர்ச் லைட்டைப்' பாய்ச்சினார். ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளது டோர்ச் அடிக்காதே அணைத்துவிடு என வந்தவர்கள் அதட்டினர் வந்தோர் நீண்ட காற்சட்டயை அணிந்திருந்தனர்.

என் கணவரை அவர்கள் அந்நேரத்தில் நீ தமிழனா? சிங்களவனா? என அதட்டிக் கேட்டனர். அடுத்து கணவர் 'ஐயோ' என அலறினார். பிள்ளைகளுடன் நான் காட்டுக்குள் ஒளித்துக் கொண்டேன். மறுநாள் காலை பிள்ளைகளுடன் ஒரு சிங்கள வீட்டில் தஞ்சம் புகுந்தேன். ஆகஸ்ட் 21-ம் திகதி என் கணவர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக அறிந்தேன்.

கண்டி மருத்துவமனையில் அவரை சடலமாகக் கண்டேன். அவர் தலையில் பெரும் வெட்டு விழுந்திருந்தது. எவ்வித சிகிச்சையும் அளிக்கப்படவில்லை. கண்டி மருத்துவமனைமூலமாகவே அவரது சடலம் அடக்கம் செய்யப்பட்டது.

கணவர் கொலை செய்யப்பட்டபின் நாம் அனாதைகளாகிவிட்டோம். எனக்கு 7 பிள்ளைகள் உண்டு. வாழ்க்கையை ஓட்டுவதற்காக தற்போது ஒருதோட்டத்தில்நான் தேயிலை கொழுந்து பறிக்கிறேன். இச்சம்பவம் தொடர்பாக பொலிசார் இருவரைக் கைது செய்து விடுதலை செய்துவிட்டனர் என கேள்விப்பட்டேன்.'

அரச தரப்பில் திரு. பி. தென்னக்கூன் ஆஜரானார்.

(உ)

### மணிவாக்கு

கட்டுப்பாடான வாழ்க்கையில் அன்றி ஒருவன் மேலோனாக முடியாது. அத்தகைய வாழ்க்கைதான் ஒருவனை யோக்கியனாக்குகிறது.

--எட்மண்ட்பாக்

## நாடும் நடப்பும்

சீர்காழி வந்தார், சுட்டிபுரத்தில் பாடினார். அடுத்து புன்னாலைக்கட்டுவனில் மதுரை சோமு வந்து பாடினார். பரவசப்பட்டார். புன்னாலைக்கட்டுவனுக்கும் சீர்காழியைக் கொண்டுவந்து பாடவைத்தார்கள்.

திருவிழா சீசன் தொடங்கிவிட்டதால் வாரியார் வருகிறார். சௌந்தரராஜன் வருவார் என்றெல்லாம் வதந்திகள்.

முன்பெல்லாம் அவர் வருகிறார், இவர் வருகிறார் என்ற செய்திகள் வெளிவரும் ஆனால் அவர்கள் வரமாட்டார்கள். வருகிறார்கள் என்று அறிவிக்கப்பட்டவர்கள் வந்தால் தான் நிச்சயம்!

'போட்டிக்குத் திருவிழா நடத்தும் மனப்பான்மை இன்னமும் நமது மக்களிடமிருந்து நீங்கவில்லை. பெருந்தொகையான பணத்தைச் செலவு செய்து நிகழ்ச்சிகளை விடிய விடியவைவததும் நிகழ்ச்சிமுடிந்ததும் மக்கள் கூட்டம் கலைந்து சென்றுவிடுகிறது. பின்னர் சுவாமிகாவுவதற்கு ஆட்களைத் தேட வேண்டியிருக்கிறது' என்று ஒருவர் கவலையுடன் தெரிவித்தார்.

'திருவிழாவுக்கு இப்படிப் பெருந்தொகையைச் செலவிடுவதற்குப் பதிலாகக் கோயில் திருப்பணிகளுக்கோ, அநாதை இல்லங்களின்பராமரிப்புக்கோ செலவிட்டால் எவ்வளவோ புண்ணியம்' என்றார் மற்றோர் அன்பர்.

ஃ ஃ ஃ

சமீபத்தில் கோண்டாவில் பஸ் டிப்போவுக்கு அதிகாலை ஐந்து மணிக்கு இ. போ. ச. வடபிராந்தியத் தலைவர் திரு. கே. அமரசிங்கம் சென்றார். அச்சமயம் சேவைக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்த ஒரு பஸ், 'மக்கர்' செய்ய ஆரம்பித்தது. இரண்டு ஊழியர் அந்த பஸ்ஸைக்கஷ்டப்பட்டுத் தள்ளிக்கொண்டு நின்றனர். இதைப் பார்த்த தலைவர் அமரசிங்கமும் அந்த ஊழியர்களுடன் சேர்ந்து பஸ்ஸைத் தள்ளினார். இதன்பின் மற்றவர்கள் பார்த்துக்கொண்டா இருந்திருப்பார்கள்!

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம் நீராவியடியிலிருந்து செல்வி வசந்தா அருணாசலம் பின்வருமாறு எழுதுகிறார்:-

4-7-78ம் தேதி 'ஈழநாட்டில்' மாநகரசபை ஆணையாளரின் உரைபற்றிய செய்தி தக்க தருணத்தில் வந்துள்ளது. நாய்வாலை நிமிர்த்த முடியாது என்பது போல யாழ்ப்பாணத்தவருக்கு சுகாதார உணர்வோ சமூக சிந்தனையோ புகட்ட முடியாத ஒன்று என்று எண்ணுமளவுக்கு தற்போது நமது நகரம் உள்ளது.

பலர் மழைநீர் வடிந்தோடுவதற்காக அமைக்கப்பட்ட வடிகால்களில் தங்கள் வீட்டுக் கழிவு நீரை விடுகின்றனர். இதனால் நீர் தேங்கி நின்று, முன்பு வருடத்தில் ஒரு சில மாதங்கள், மழைக்காலங்களில் மட்டும் இருந்த நுளம்புத் தொல்லை தற்போது 365 நாட்களும் வதைக்கிறது. சிலர் அதுவுமில்லாமல் சழிவு நீரை அது தன்பாட்டுக்குச்செல்லும்படி தெருவில் விடுகின்றனர். சேறும் சகதியுமாக வீதியில் போவோர் வருவோரால் நாற்றமும் அசிங்கமும் சகிக்க முடியவில்லை. குப்பை கூளங்களை பெரும்பாலும் சுவருக்கு மேலாக வெளியே தெருவில் கொட்டிவிட்டு, கேட்டால், மாநகரசபை வண்டி வந்து அள்ளிக்கொண்டு போகும் என்கிறார்கள். பாவம் மாநகரசபை. தெருக்குப்பை மட்டுமல்ல, ஒவ்வொருவர் வீட்டுக் குப்பையும் அள்ளிக்கொட்டுவதென்றால் சுலபமானவேலையா என்ன?

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றைன்றும் கூற வேண்டும். எங்கள் அயலவர் ஒருவர், அவ

(5ம் பக்கம் பார்க்க)

# ஹரியானு முதல்வர் தேவிலாலுக்கும் ராஜினுமாக் கோரிக்கை

## ஜனதா ஆட்சிமன்றக்குழு முடிவு

புதுடில்லி, ஜுலை,5

ஹரியானு முதன் மந்திரி திரு. தேவிலாலையும் பதவியிலிருந்து விலகுமாறு ஜனதா கட்சியின் ஆட்சிமன்றக்குழு கேட்டுக் கொண்டுள்ளது,

நேற்றுக் கூடிய ஜனதா கட்யின், ஆட்சிமன்றக்குழு திரு. தேவிலாலின் விவகாரம் குறித்து ஆராய்ந்த பின்னர் இந்த முடிவை மேற்கொண்டது.

ஹரியானு முதன் மந்திரி பதவியிலிருந்தும் மாநிலசட்ட சபைத்தலைவர் பதவியிலிருந்தும் திரு. தேவிலாலை விலகுமாறு கோரும் ஆட்சிமன்றக் குழுவின் தீர்மானத்தை பொதுக்காரியதரிசி திரு. ராமகிருஷ்ண கெக்டே திரு, தேவிலாலிடம் முறைப்படி அறிவித்தார்.

ஜனதா கட்சிக்கும், அரசுக்கும் எதிராக பிரதமர் திரு. மொரார்ஜிதேசா் சதிசெய்தார் என்று திரு. தேவிலால் சுமத்திய குற்றச் சாட்டை வாபஸ்பெற அவர் மறுத்தமையினுலும் திரு. சரண்சிங்கின் ஆதரவாளர்களால் நடத்தப்பட இருக்கும் பேரணியில் கலந்து கொள்ள வேண்டாம் என்று ஜனதாக்கட்சி விடுத்த வேண்டுகோளை மறுத்ததற்காகவுமே திரு. தேவிலால் ராஜினுமாச் செய்யும்படி கோரப்பட்டுள்ளார் என்று ஆட்சிமன்றக்குழு அறிவித்தது.

### கூட்டத்தில் தேவிலால்

விசேட அழைப்பின்பேரில் திரு. தேவிலாச் ஆட்சிமன்றக் கூட்டத்தில் கலந்து கொண்டார், 40 நிமிடம் கூட்டத்தில் கலந்து கொண்டபின்னர் விவாதம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அவர் கூட்டத்தை விட்டு வெளியேறினர்.

### வெளியேற மறுப்பு

ஆட்சி மன்றக் குழுவின் இத்தீர்மானம் அரசியல் சாசனத்திற்கு முரணுனது என்றும் தாம் தமது பதவிகளை ராஜினுமாச் செய்யப் போவதில்லை என்றும் திரு. தேவிலால் தெரிவித்துள்ளார்.

### சரண்சிங் மறுப்பு

இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்க வெளியேற்றப் பட்ட முன்னுள் உள்துறை அமைச்சர் திரு, சரண்சிங் மறுப்புத் தெரிவித்துள்ளார்,

### வெளியேருவிடின் நம்பிக்கையில்லாத் தீர்மானம்

திரு. தேவிலால் பதவியிலிருந்து விலக மறுத்தால் அவர் மீது சட்டசபையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு அவர் வெளியேற்றப்படுவார் என்று வெளிநாட்டு அமைச்சர் திரு, ஏ, பி. வாஜ்பாய் தெரிவித்தார். (இ)

## கும்பாபிஷேகம்

(மட்டுவில்)

மட்டுவில் வடக்கு அத்தாய்ப்பகுதி ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலய விக்கிரக பிரதிஷ்டை கும்பாபிஷேகம் இம்மாதம் 15-ம் திகதி நடைபெறும்.

சிவஸ்ரீ. ப. வைத்தியநாதக் குருக்கள் தலைமையில் இக்கும்பாபிசேஷகம் நடைபெறும்.

இம்மாதம் 14-ம் திகதி அம்பாள் விக்கிரகம் மங்கள வாத்தியங்கள் சகிதம் ஊர் உலா கொண்டுவரப்படும் 15-ம் திகதி பிரதிஷ்டை செய்து கும்பாபிசேகம் செய்யப்படும் பகல் ஏழைகளுக்கு அன்னதானமும் வழங்கப்படும். (உ)

## கைப்பற்றப்பட்ட அரபுப்பகுதியிலிருந்து

# இஸ்ரேல் 5 வருடத்துக்குள் வெளியேற வேண்டும்

## எகிப்திய அதிபர் நிபந்தனை

கெய்ரோ ஜுலை 5

ஜோர்தானின் மேற்குகரையிலிருந்து, காஸா பள்ளத்தாக்கு பகுதியிலிருந்தும் இஸ்ரேல் இன்னும் ஐந்து வருட காலத்திற்குள் வெளியேறிவிட வேண்டும் என்று எகிப்திய அதிபர் ஜனுப் அன்வர் சதாத் தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு அமைதி குறித்து மீண்டும் இஸ்ரேலுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அமெரிக்க உபஅதிபர் திரு. மொண்டேலிடம் சமர்ப்பித்த ஆலோசனைகளிலேயே ஜனுப் சதாத் மேற்கண்டவாறு கூறியுள்ளதாக எகிப்திய பத்திரிகையான 'அல் அக்ரம்' செய்தி வெளியிட்டுள்ளது.

ஜோர்டானின் மேற்குகரையின் நிர்வாகம் ஜோர்டான் அரசிடமும் காஸா பள்ளத்தாக்கு பகுதியின் நிர்வாகம் எகிப்திய அரசிடமும் இஸ்ரேல் ஐந்து வருட காலத்தில் ஒம்படைக்க வேண்டும் என்றும் ஜனுப் சதாத் தெரிவித்தார். (இ)

## கர்நாடகவித்துவான் ராஜாஐயங்கார் காலமானர்

சென்னை, ஜுலை 5

தென் இந்திய பிரபல கர்நாடக சங்கீத வித்துவான் திரு ராஜாஐயங்கார் நேற்று பங்களூரில் தமது 78 வது வயதில் காலமானர்.

கடந்த ஆண்டு சென்னையில் நடைபெற்ற சென்னை வானெலியின் பொன்விழாவில் கௌரவிக்கப்பட்ட இவர் அரசிடமிருந்து ஆயுள்காலம் முழுவதும் 500 ரூபா பென்ஷன் பணம் பெற்று வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## இடிஅமின் பயணம்செய்யும் விமானங்களை அனுமதிக்காதீர்

லண்டன், ஜுலை 5

உகண்டா அதிபர் ஜெனரல் இடிஅமின் பயணம் செய்யும் விமானங்களை இறங்க அனுமதிக்க வேண்டாமென 42 விமான நிலையங்கள் கேட்கப்பட்டுள்ளன.

சர்வதேச விமானக் கட்டுப்பாட்டாளர் சம்மேளனம் இக்கோரிக்கையை விடுத்துள்ளது. (இ)

## மானிப்பாயில் சுகாதாரவாரப் போட்டிகள்

(பண்டத்தரிப்பு)

சுகாதார வாரத்தை முன்னிட்டு மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் பிரிவில் விசேஷ கருத்தரங்குகளையும், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் என்பவற்றிடையே கட்டுரைப்போட்டி, பேச்சுப் போட்டி, நாடகப்போட்டி என்பவற்றையும் நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்தில் டாக்டர் திருமதி எஸ். திருநாதன் தலைமையில் நடைபெற்றபோது சுகாதார வாரத்தை இம்முறை சிறப்பாகக்கொண்டாடுவது என்றும் இம்மாதம் 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று மானிப்பாய்ப் பட்டண சபை மைதானத்தில் விழாவொன்றை நடாத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (அ)

## இளம் பெண்ணின் வயிற்றில் 38 கிலோகட்டி

சென்னை, ஜுலை 5

20 வயது இளம் பெண்ணின் வயிற்றிலிருந்து 38 கிலோகட்டி ஒன்றை டாக்டர்கள் வெற்றிகரமாக வெளியேற்றியுள்ளனர்.

புதுச்சேரி ஆஸ்பத்திரி ஒன்றிலேயே இந்த சத்திர சிகிச்சை நடைபெற்றது.

இளம்பெண் நல்ல தேகஆரோக்கியத்துடன் இருக்கிறுர் என்று டாக்டர்கள் தெரிவித்தனர்.

## 8-ல் பரீட்சை

(உடுப்பிட்டி)

உள்ளுராட்சி கணக்குப் பதிவியலாளர் சேவையின் தரம் இரண்டிற்கு ஆட்சேர்ப்பதற்கான எழுத்து மூலப் பரீட்சை 8ம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு லும்பினி மகாவித்தியாலயத்தில் நடைபெறும் இப்பரீட்சையில் கணக்குப் பதிவியல், பொது விவேகம், உளச்சார்பு ஆகிய பாடங்களில பரீட்சை நடாத்தப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## மாதிரிக்கிராமம்

(பண்டத்தரிப்பு)

வலிதென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பின்தங்கிய நிலையிலுள்ள கிராமமான சாந்தைக் கிராமம், மாதிரிக் கிராமமாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இக்கிராமத்தின் அபிவிருத்திக்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு 10 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார். இக்கிராமத்தில் சேரிஒழிப்புத் திட்டத்தை அமுல் நடாத்தி புதிய வீடமைப்பு திட்டமொன்றை நிறுவுவதற்கும், சுகாதார, கல்வி, கைத்தொழில் திட்டங்களை ஏற்படுத்தி அபிவிருத்தி செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 'பழையமாணவர்களின்பற்று பாடசாலையை வளர்க்கும்'

(யாழ்ப்பாணம்)

"வயாவிளான் மத்தியமகா வித்தியாலயம் ஏழைப்பிள்ளைகளுக்கு ஆற்றிய சேவை அளப்பரியது. அந்த நன்றியை ஏழைக் குடும்பங்களிலே பிறந்து இங்கு படித்து உயர்ந்த பழைய மாணவர்கள் மறக்கலாகாது. எம்மை வளர்த்த பாடசாலையை நாம் வளர்ப்போம். கல்லூரி வளர்ச்சிக்கு ஒரு லட்சமா, ஒரு கோடியா எவ்வளவு நிதியென்ருலும் திரட்டித் தருவோம்.

இவ்வாறு சப்இன்ஸ்பெக்டர் திரு. நாதன் வயாவிளான் ம. மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கக்கூட்டத்தில் பேசுகையில் கூறிஞர்.

கூட்டம் கல்லூரி மண்டபத்தில் அதிபர் திரு. ஆ. இராமசாமி தலைமையில் நடைபெற்றது.

அதிபர் தமது தலைமையுரையில் பேசியதாவது:

தாம் கற்பித்த பழைய மாணவர்களை நல்லநிலையில் காணுகின்றபோது அவர்களைக் கற்பித்த ஆசிரியர்களுக்கு மிகுந்த சந்தோஷம் ஏற்படுகின்றது. குழப்படி மாணவர்களைக் கண்டாலும் ஆசிரியர்களுச்கு ஆனந்தமுண்டாகின்றது. இந்த நல்ல உறவை வளர்ப்பதற்காகவே சிறிது காலம் இயங்காதிருந்த இப் பழைய மாணவர் சங்கத்தை மீண்டும் இயங்க வைக்கவேண்டுமென்று விரும்பினேன்.

இப்பாறிய முன்னுள் அதிபர் திரு. கே. நவரத்தினராஜா பேசுகையில் குறிப்பிட்டதாவது:

இந்தப் பாடசாலையிலே பிள்ளைகள் தமிழ்ப் பண்புகளை அடியொற்றிக் கல்விபயில வேண்டும் என்று விரும்பியவன் நான். இதனுல் தமிழ் அபிமானம் இல்லாதவர்களுடன் பிரச்னைப்படவும் நேர்ந்தது. தமிழையோ தமிழர்களையோ பழிப்பவர்களை நான் மதிப்பதில்லை. தமிழர் தமிழராக வாழவேண்டும். தமிழ்ப் பண்பையும் கலாச்சாரத்தையும் பேணவேண்டும். நான் படித்த கல்லூரி என்கின்ற பற்றுணர்வு பழைய மாணவர்களுக்கு இருத்தல்வேண்டும். அந்தப் பற்று இருந்தால் பாடசாலையை வளர்க்கவேண்டியதில்லை. அது தானுகவே வளரும்.

எதிர்க்கட்சித் தலைவரின் செயலாளர் இ. பேரின்பநாயகம், வரி மதிப்பாளர் திரு. ஆ. கனகரத்தினம், கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வ. தங்கராஜா, முன்னுள் உபஅதிபர் திரு. சி. ஆறுமுகம், முன்னுள் அதிபர் திரு. பொ. சபாரத்தினம் ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர்.

கூட்டத்தொடக்கத்தில் திரு. வ. சி. சுப்பிரமணியம், செயலாளர் அறிக்கையையும் திரு. சி. கனகசுந்தரம் பொருளாளர் அறிக்கையையும் வாசித்தனர். முடிவில் உத்தியோகத்தர் தெரிவும் நடைபெற்றது. (இ)

## மாணிக்க இடைக்காடரின் சமயப்புத்தகம்

# மலேஷிய அரச ஊழியருக்கு தகுதிகாண் பரீட்சைநூல்

கோலாலம்பூர், ஜுலை 5

இலங்கையரான திரு. நா. மாணிக்க இடைக்காடர் எழுதிய மலேஷிய மக்களின் கலாச்சார பின்னணியும்இந்துசமயத்தின் பங்கும் என்ற நூலை மலேஷியாவில் அரசாங்க ஊழியர்களின் பதவி உயர்வுத் தகுதிகாண் பரீட்சைக்கான கட்டாய பாடநூலாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

திரு. மாணிக்க இடைக்காடர் மலேஷிய பல்கலைக் கழகத்தில் கணித புள்ளிவிபர இயல் விரிவுரையாளராகப் பணியாற்றிய காலத்திலேயே அரசின் வேண்டுகோளுக்கு இணங்க இப்புத்தகத்தை எழுதியிருந்தார்.

இவர் ஆங்கிலத்தில் எழுதிய நூலை மலேஷிய அரசு மலாய் மொழியில் 1963-ம் ஆண்டு மொழிபெயர்த்து பிரசுரித்தபோது 10 ஆயிரம் பிரதிகள் வெளிவந்தது. இந்நூலின் இரண்டாவது பதிப்பும் அண்மையில் வெளிவந்தது.

மலேஷிய அாசாங்க மொழி அதிபர் இதுபற்றி கருத்துத் தெரிவிக்கையில், "அரசாங்கத்தில் கடமையாற்றும் சகல உத்தியோகத்தர்களும் மற்றைய சமயங்களைப் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும் அப்பொழுதுதான் தங்கள் பல்வேறு கடமைகளையும் நன்கு செய்வார்கள், மற்றையசமயங்களையும்மதிப்பார்கள் இதனுல் தான் இந்நூலை அரசு கட்டாய நூலாக்கியது" என்ருர். (இ)

## மயானத்தில் திருட்டு

(பண்டத்தரிப்பு)

சிறுவிளான் முள்ளானை மயானத்தில் இருந்த இரும்பு 'கேற்' இரவு வேளையில் திருடப்பட்டுள்ளதாக சங்கானை பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து சிறுவிளானிலுள்ள ஒருவீட்டிலிருந்து களவுபோன இரும்புக்கேற்றை பொலிஸார் கைப்பற்றினுர்கள்.

ஆயிரம்ரூபா பெறுமதியானது என்று கூறப்படும் இந்த இரும்பு "கேற்" திருடப்பட்டது தொடர்பாக பிரஸ்தாப வீட்டிலிருந்த நபர் ஒருவரையும் பொலிசார் கைது செய்துள்ளார்கள்.

# வெற்றியினுல் துள்ளுவதோ தோல்வியினுல் துவளுவதோ கூடாது"

## நீதிபதி பாலகிட்ணர் அறிவுரை

(மட்டுவில்)

'மனித வாழ்வுக்குத் தேவையான உயர்ந்த இலட்சியங்களையும், வாழ்க்கைத் தத்துவங்களையும், மாணவருக்கு உணர்த்த விளையாட்டுப் போட்டி முக்கிய கருவியாக அமைகிறது. அன்பு, பண்பு, நட்பு, சாதுரியம், எதிர்காலம் பற்றிச் சிந்தித்தல் போன்ற உயர்ந்த பண்புகள் மாணவர் மத்தியில் வளர விளையாட்டுப்போட்டி வித்திடுகிறது.'

இவ்வாறு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. கி. பாலகிட்ணர் கூறினார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. கி. பாலகிட்னர் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

இப்போட்டி கல்லூரி அதிபர் திரு. பூ. வெற்றிவேலு தலைமையில் நடைபெற்ற போட்டியில் திரு. பாலகிட்ணர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'வெற்றியும் தோல்வியும் மனிதனுக்குச் சகஜம், வெற்றியைக்கண்டு வீருப்பு கொள்வதோ, தோல்வியைக்கண்டு துவண்டு விடுவதோ மாணவரின் எதிர்கால வாழ்வுக்கு ஏற்றதல்ல. வெற்றி தோல்வி இரண்டையும் சமமாக எடைபோட்டுப் பழகவேண்டியது மாணவரின் வாழ்க்கை இலட்சியங்களில் முக்கியமானது.

விளையாட்டுப் போட்டி மூலம் மாணவர் கூட்டுறவை நிர்வாகத்திறமையை நன்கு கற்றுக்கொள்ளுகிறார்கள். இவை எமது இளைஞர்களின் வாழ்வு உயர்வதற்கு ஏணியாக அமைகிறது. ஆகவே மாணவரின் எதிர்காலம் ஒளிமயமாகவேண்டும் என்றால், விளையாட்டுப் போட்டிகளின் சட்டதிட்டங்களைத் தமது வாழ்க்கையின் இலட்சியங்களாக அமைத்துக்கொள்ள வேண்டும்.

திருமதி எம். ரி. சுப்பிரமணியம் பரிசில்களை வழங்கினார். (உ)

# யாழ். செயலகத்தில் ஜே. ஆரின் நெல்மணி ஓவியம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி நெல்மணி ஓவியர் திரு. துரைசிங்கம் துரைரத்தினத்தால் நெல்மணிகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் உருவப் படம் யாழ். செயலகத்தில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

'மொட்டைக் கருப்பன்', 'பெரியவெள்ளை', 'எச்-4', 'சம்பா' இளநெல் வகைகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த ஓவியம் அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோவின் உத்தரவின் பேரில் இம்மாதம் 26ம் திகதி வரை செயலகத்தில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும். (இ)

# "கலைஞர்களைக் கௌரவிப்பதில் நாம் தமிழகத்துக்கு சளைத்தவரல்லர்"

## -- திருமதி அமிர்தலிங்கம்

(யாழ்ப்பாணம்)

"நாதஸ்வரக்கலையும், பரதநாட்டியமும் எமது இரு கண்கள் போன்றவை இக்கலைகள் செகராசசேகரன், பரராஜசேகரன் காலத்தில் நன்கு வளர்க்கப்பட்டன. இன்று தமிழினம் தாழ்ந்துபோய் இருப்பினும் இக்கலைஞர்கள் முன்னணியில் விளங்குவதற்கு தமிழீழ மக்கள் தம்மாலான கௌரவத்தை அளித்தே வருகிறார்கள். கலைஞர்களைப் போற்றுவதில் தமிழக மக்களுக்கு எவ்விதத்திலும் எம்மவர் சளைத்தவர்களல்லர்.

இவ்வாறு நாதஸ்வரமேதை என். ஆர். கோவிந்தசாமிப் பிள்ளைக்கு 'நாதசுகாமிர்தவர்ஷணி' என்ற பட்டமளிப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் கூறினார்.

இணுவில் கந்தசுவாமி ஆலய தேர் உற்சவத்தின் இரவுத் திருவிழாவின்போது நடந்த இப்பட்டமளிப்பு விழாவில் கலையரசு ரி. சொர்ணலிங்கம் பாராட்டுரை வழங்கிப் பொன்னாடை போர்த்து அவரைக் கௌரவித்தார்.

கலையரசு சொர்ணலிங்கம் உரையாற்றுகையில், 'இணுவில் மண் இசைக்கலைஞரும், ஆசிரியர்களும், அறிஞர்களும் நிறைந்த மண். இங்கு சைவமும், தமிழும், கலையும் வளர்த்துவருகிறது. மக்களால் அவை பேணப்படுகிறது. திரு. கோவிந்தசாமி பல்லாண்டு காலம் வாழ்ந்து இக்கலையை மேன்மைப்படுத்த வேண்டும்'' என்றார்.

ந. வீரமணிஐயரால் இயற்றப்பட்ட வாழ்த்துப்பாவை அவரே இசைத்துப்பாடினார். இசைப் புலவர் திரு. சண்முகரத்தினம் தங்கப்பதக்கம் சூட்டினார். ஓய்வுபெற்ற நீதிபதி திரு. வி. குமாரசுவாமி, நீதவான் திரு. கே. வி. நவரத்தினம், உடுவில் உதவி அரசாங்க அதிபர், திரு. சபா. ஆனந்தர் வித்துவான் இ. திருநாவுக்கரசு உட்படப் பலர் பேசினர். (ச-உ)

# இரு குழந்தைகள் கருகி மாண்டனர்!

## மாங்குளத்தில் கோரசம்பவம்

(மட்டுவில்)

வீதியில் ஓடிக் கொண்டிருந்த ஜீப் வண்டியின் பின்பக்கத்து டயர் வெடித்ததைத் தொடர்ந்து, வண்டி குடைசாய்ந்து தீப்பிடித்துக் கொண்டதால், இரு பாலகர் எரிந்து ஸ்தலத்திலேயே மரணமடைந்தனர். மூவர் எரிகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். இக்கோர சம்பவம் மாங்குளத்தில் நடைபெற்றுள்ளது.

மடுமாதா விழாவிற்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் இந்த ஜீப் வண்டியின் பின்டயர் வெடித்ததின் காரணமாக வேகமாக வந்து கொண்டிருந்த ஜீப் வண்டி தடம் புரண்டு வீதி ஓரத்தில் கவிழ்ந்தது. இக்கட்டத்தில் வண்டியின் மீது பெட்ரோல் சிந்தியதாம். உடனே வண்டியில் தீப்பிடித்துக் கொண்டது.

வண்டியில் பிரயாணம் செய்தவர்கள் அவசரமவசரமாக வெளியேறியும்கூட, குருசாமி சிவராஜா வயது 5, அரியதாஸ் செல்வராஜ் வயது 4 என்ற இரு பாலகரும் தப்பித்துக் கொள்ள முடியாத நிலையில் தீயில் சிக்கி கொடூரமாகக் கருகி ஸ்தலத்திலேயே மாண்டனர். இரு ஆண்களும், ஒரு பெண்ணும் பலத்த எரிகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கரையூரைச் சேர்ந்தவர்களும், குடத்தனையைச் சேர்ந்த சிலருமே இந்த ஜீப் வண்டியில் பிரயாணம் செய்து கொண்டிருந்ததாக, பொலிஸ் விசாரணையின் போது தெரிய வந்துள்ளது. மாங்குளம் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த சார்ஜன்ட் திரு. ஆர். தேவதுரை, திரு. எஸ். தனபாக்கியம் ஆகியோர் புலன் விசாரணை செய்து வருகிறார்கள்.

## நாடும்நடப்பும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ரது வீட்டின்முன் உள்ள அரசமரத்திலிருந்து தெருவில் விழும் இலைகளையும், தானே கூட்டிக் குவித்து, நெருப்பும் வைத்துவிடுகிறார். ஆனால் இப்படிப் பட்டவர்கள் நூற்றில் ஒருவரே. மற்றவர்களோ தங்கள் வீட்டுக் குப்பையையும் எதிர்வீட்டு சுவரருகே கொட்டிவிடுவர்.

பிரதமர் பிரேமதாசா கொழும்பு நகரை பூந்தோட்ட நகரமாக்க முனைந்திருக்கும் இவ்வேளையில் நாமும் எங்கள் யாழ்ப்பாண நகரை அழகுபடுத்த குறைந்தது சுத்தமாக வேனும் வைத்திருக்க முயல்வோம்.

ஃ ஃ ஃ

'சுத்தம் சுகந்தரும்'. சுலோக அட்டைகள் தொங்குமிடங்களில் வேண்டுமென்றே அசுத்தம் செய்பவர்களை என்ன சொல்வது?

ஃ ஃ ஃ

விளையாட்டு வீரர்கள் பலரை உருவாக்கிய யாழ்ப்பாணம் யுனைட்டெட் விளையாட்டுக் கழகம் இம்மாதம் 15ந் தேதி 'புளுகர் பொன்னையா', 'குளறி கந்தையா', புகழ் வரணியூரானின் 'அசட்டு மாப்பிள்ளை' என்னும் நாடகத்தை வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற்றுகிறது.

-ஊர்சுற்றி

# பரிசுபெற்ற நாடகங்கள்

(வெள்ளவத்தை)

மத்தியவங்கி தமிழ்இலக்கிய மன்றம் அகில இலங்கை ரீதியில் நடத்திய தமிழ் நாடக விழாவில் ஆ. த. சித்ரவேலின் 'செவ்வானத்தில் ஒரு...' என்ற நாடகம் முதலாம் இடத்தையும், அந்தனி ஜீவாவின் 'அக்கினிப் பூக்கள்' இரண்டாம் இடத்தையும், எஸ், வாசுதேவனின் 'மனிதன்-பகுத்தறிவு - மிருகம்' மூன்றாவது இடத்தையும் பெற்றது.

சிறந்த நடிகராக வி. திவ்வியராசாவும், சிறந்த நடிகையாக பிரியா ஜெயந்தியும் தெரிவு செய்யப்பட்டார்கள். நாடக விழாவில் பங்குபற்றிய நாடகங்களில் சிறந்த நடிப்புக்காக வி. திவ்வியராசா (விடிவெள்ளி), மன்குமார் (அக்கினிப்பூக்கள்), நடேசராசா (மனிதன்-பகுத்தறிவு-மிருகம்), மோகன் தம்பிராசா (பொம்மைகள்), வி. திவ்வியராசா (செவ்வானத்தில் ஒரு) எல். எம். முத்து (சிந்தனைகள்) ஆகியோருக்கு சிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. நாடக விழாவில் இடம் பெற்ற ஆறு நாடகங்களின் தயாரிப்பாளர்களுக்கு பரிசில்களாக பணமும் பாராட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

## அண்ணன்கொலை

### தம்பி தலைமறைவு

(மஹியங்கனை)

மஹியங்கனைப் பொலிஸ் பகுதியில் கருணபால என்ற 18 வயது வாலிபர் ஒருவர் 16 வயதுள்ள அவருடைய தம்பியால் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஹேமரத்ன என்ற இச்சந்தேக நபர் தலைமறைவாகிவிட்டாராம். (உ)


வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சிவகுமார்-ஜெய்சித்ரா
வெள்ளிக்கிழமை விரதம்

Rio (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
SPYS

நாகம்ஸ் (சுன்னுகம்)
தினசரி 6-45, 10-00
ஜெய்சங்கர் - லக்ஷ்மி
மாணவன்

சாந்தி யாழ். நகர் போன்: 7612
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45,
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா-அசோகன்-மனேகர்-சோ
கணவன் புத்தம் புதிய பிரதி

REGAL Daily at 4-45, 7- & 9-30 P. M. only.
KEN CLARK in
Road To Fort Alamo
(Scope Color)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
பாலாஜி - அஞ்சலிதேவி
நாகநந்தினி

லிடோ (யாழ்.நகர்) போன்: 7692
சிவகுமார், அல்கா
மதனமாளிகை

ராணி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சோ
சௌகார்ஜானகி-சுந்தரராஜன் நடித்த
பெரும் புகழும்

ராஜா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-ரஜனி-ஆலம்
சுதா-வை. விஜயா நடித்த
மன்மத லீலை
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
இன்று மட்டும்
முத்துராமன்-சந்திரகலா-ஸ்ரீவித்யா நடித்த
காலங்களில் அவள் வசந்தம்
நாளை முதல் ஜெய்சங்கர் - லக்ஷ்மி நடித்த
கே. பாலசந்தரின்
நூற்றுக்கு நூறு

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - ஸ்ரீவித்யா
ஜெயசுதா - சுந்தரராஜன்
அபூர்வ ராகங்கள் (புத்தம் புதிய பிரதி)

# துரையப்பா வீட்டில் நடந்த கதைபற்றி

# சாட்சியிடம் கேள்வி

(கொழும்பு)

யாழ்ப்பாணம் முன்னுள் மேயர் துரையப்பா கொலை வழக்கில் சாட்சியான சிவனுவை முதலாவது எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி எம். சிவசிதம்பரம் விசாரணையின் இரண்டாம் நாளான செவ்வாயன்று சாங்கோபாங்கமாக குறுக்குவிசாரணை செய்தார்.

துரையப்பா சுடுபட்டதையடுத்து அங்கு வந்த திரு. ராஜசுந்தரத்தின் வான் சம்பந்தமாகவும் சட்டத்தரணி குறுக்குவிசாரணை செய்தார். தொடர்ந்து நடந்த குறுக்கு விசாரணையின் விபரம் வருமாறு;

சட்; திரு. துரையப்பாவை மேயர் பதவியிலிருந்து இறக்க சிலர் முயற்சித்தனர்?-ஆம்.

சட்; அவர்களில் சிலர் குமாரசூரியரின் கையாட்கள்? (மெளனம்).

சட்; ராஜசுந்தரம் மாஸ்டர் திரு. குமாரசூரியரின் கையாள்?-(மெளனம்).

சாட்சி: இவ்விஞக்களுக்குப் பதிலளிக்காது மெளனமாக நிற்கவும், கேள்விகளுக்குப் பதிலளிக்கும்படி நீதிபதி கூறினுர். அப்போது சாட்சி, 'எனக்கு இவை பற்றி எதுவும் தெரியாது' என்ருர்.

சட்; மேயர் பதவியிலிருந்து இறக்க முயற்சித்தவர்களே இக்கொலைக்குக் காரணமாக இருந்திருக்கலாமெனத் துரையப்பா வீட்டில் கதை இருந்தது?-இருந்திருக்கலாம்.

சட்; அந்தச் சூழ்நிலையில் தான் 6ந் தேதி வாக்குமூலம் அளித்தீர்?-(மெளனம்).

சட்; சம்பவ தினம் கோவில் வாசலுக்கடியில் 10 அடி தூரத்தில்கார் நிற்பாட்டப்பட்டது?- ஆம்.

சட்; மதில் எதிர்ப்புறம்?- ஆம்.

சட்; முன்புறம் மதில்?-ஆம்'

சட்; அதில்தான் 'கேற்' இருக்கிறது?-ஆம்.

சட்; உள்ளே 'கேற்'றை அல்லது மதிலைத் தாண்டித்தான் போகவேண்டும்?-ஆம்.

சட்; 'சூட்' எனச் சத்தம் கேட்டது. 'கேற்'றினுள் சென்ற பின்னர்?-ஆம்.

சட்; எவ்வளவு தூரம் உள்ளே போனுர்?-15 அடி.

சட்; அப்போ 'கேற்'றிலிருந்து கார் 10 அடி, அவர் உள்ளே 15 அடி போயிருந்தார், எனவே முதல் சூடு கேட்டபோது 25 அடி போய் இருந்தார்?-ஆம்.

சட்; முதல் சூடு 'கேற்'றின் உள்ளே?-ஆம்.

சட்; பொலிசுக்கு வாக்குமூலம் கொடுத்திரா?-ஆம்.

சட்; சம்பவதினம்கொடுத்த வாக்குமூலத்தில் 'கேற்' அருகில் செல்லும்போது 'சூட்' என்று சத்தம் கேட்டதென் றீரா?-ஆம்.

சட்; எது சரி, 'கேற்' அருகில் செல்லும்போதா? அல்லது உள்ளே 15 அடி சென்ற பின்னரா?-உள்ளே போன பின்தான்.

சட்; அப்போ பொலிசுக்கு கூறியது பிழை?-இருக்கலாம்.

சட்; ஆம் அல்லது இல்லை என்று சொல்லும்?-இல்லை.

சட்; நீர் ஒரு புதுமையான மனிதர். காலம் போகப் போக உமக்கு ஞாபகசக்தி அதிகரிக்கிறது. (சிரிப்பு) 3 ஆண்டுகளின் பின் 15 அடி உள்ளே போனபின் என்கிறீர்?-(மெளனம்)

சட்; யோகநாதன் காரின் வலதுபுறமாக இறங்கி இடதுபுறமாகக் காரின் பின்புறம் வந்தார்?-ஆம்,

சட்; பின்னர் அவரை எங்கு கண்டீர்?-சடையில்.

சட்: சூடு விழ்ந்தபோது, ஐயா ஓடிவரும்போது யோகநாதனை நீர் காணவில்லை?- இல்லை.

சட்: துரையப்பா திரும்பி கார்ப்புறம் ஓட 3 பேர் துரத்தி வந்தனர், 2 பேர் சுட்டனர் என்றீர் நேற்று?-ஆம்.

சட்: சம்பவதினம் பொலிசுக்கு கொடுத்த வாக்குமூலத்தில் 2 பேர் துரத்தி வந்ததாகக் கூறினீர்?-3 பேர்தான்.

சட்: முதலில் கேள்விக்குப் பதில், 2 பேர் என்றீரா?- இல்லை.

சட்; 2பேர் சுட்டுக்கொண்டு வந்தனர் என்றீர் நேற்று, ஆனல் சம்பவதினமும், 6ந் தேதியும் அளித்த இரு வாக்குமூலங்களிலும் துரத்தும்போது சுட்டார்கள் என்று ஒரு வார்த்தையும் கூறவில்லை?- இல்லை.

சட்; 2 பேர் சுட்டதை நீர் கண்டது முக்கிய விடயம்?- ஆம்.

சட்: ஆனல் அது பற்றி ஒருசொலலும் சொல்லவில்லை? -ஆம்.

சட்: 2 பேர் உம்மிடம் வந்ததாகக் கூறினீர்?-ஆம்.

சட்: 2 பேரும் துப்பாக்கி வைத்திருந்தனர்; ஒருவர் பயமுறுத்திஞர் என்றீர்?. ஆம்.

சட்: சம்பவதினமும் இப்படி கூறினீரா?- (மெளனம்)

சட்: துரையப்பாவை இருவர் துரத்த, மற்றவர் உம்மிடம் வந்ததாக கூறினீரா?- இல்லை.

சட்: 6ந் தேதி கொடுத்த வாக்குமூலத்தில் இருவர் துரத்தி வந்தனர்; ஒருவர் கத்திவைததிருந்தார்; மற்றவர் துப்பாக்கியுடன் வந்து மிரட்டிஞர் என்றீர்?- ஆம்.

சட்: 2ம் எதிரி வந்து துப்பாக்கியுடன்மிரட்டிஞர்என்று நேற்றுக்கூறியது பிழை?- இருவரும் ஒன்ருகவே நின்றனர்.

நீதிபதி: நேற்று, இருவர் துப்பாக்கிவைத்திருந்ததாகவும், அவர்கள் இருவரும் சுட்டுக்கொண்டே ஓடியதாகவும் கூறினீர். காரிலிருந்து இறங்கியபோது உம்மை நோக்கிச் சுடவந்ததாகக் கூறினீர். 6ந் திகதி சொன்னதும் சரி என்கிறீர்; இப்போது கத்தியும், துவக்கும் என்கிறீர் எது உண்மை?- 3 பேரும் வந்தனர்.

சட்: நேற்று இருவர்; இன்று மூவர்?- (மெளனம்)

சட்: இருவர் துவக்கு; ஒருவர் கத்தி வைத்திருந்தனர்?-

சட்: சம்பவதின வாக்குமூலத்தில் ஒருவர்; 6ந் தேதி வாக்குமூலததில் இருவர்; ஒருவர் கத்தி, மற்றவர் துவக்கு வைத்திருந்தார். இன்று மூவர், இருவர் துவக்கு, ஒருவர் கத்தி வைத்திருந்தார் என்கிறீர்? இவற்றில் எது சரியானது?- 3 பேர் வந்தனர்.

சட்: 3வது ஆள் இங்கு இருக்கிருரா?-இல்லை.

சட்: 6ந் தேதி வாக்குமூலம் அளித்தபோது பொலிசார் ஏதாவது கேள்வி கேட்டனரா?- இல்லை.

சட்: அடையாளம் காட்ட முடியுமா என 6ந் திகதி கேட்டனரா?- ஆம்.

சட்: இப்போ இல்லை என்றீர்?- (மெளனம்).

சட்: யாரையாவது அடையாளம் காட்ட முடியுமா எனப் பொலிசார் கேட்டனரா?- இல்லை, அப்படி எதுவும் அவர்கள் கேட்கவில்லை.

சட்: என்ன கேட்டனர்?- அடையாளம் காட்டமுடியுமா என்று.

சட்: அதையேதான் நானும் கேட்கிறேன்?- (சிரிப்பு)

சட்: அவர்கள்அணிந்திருந்த உடை பற்றிக்கூட கூற முடியாது என்றீர்?-இல்லை, காட்ட முடியும் என்றேன், சங்கானைப் பொலிசிலும் சொன்னேன்.

சட்: நேற்று இரவு சி. ஐ. டி. பொலிசார் சொல்லித் தந்தவை இங்கு வேண்டாம், 6ந் தேதிவாக்கு மூலம்பற்றியே நான் கேட்கிறேன்?- பொலிசார் அப்படிக் கேட்கவில்லை.

சட்: 2 நிமிடங்களுக்குமுன் அவர்கள் கேட்டதாக கூறினீரே?- (மெளனம்).

சட்: ஏதாவது கேட்டனரா முடிவாகக் கூறும்?- எதுவும் என்னைக்கேட்கவில்லை.

நீதிபதி: அடையாளம் காட்டமுடியுமா என்றுபொலிசார் கேட்டிருப்பார்களே?- எதுவும் கேட்கவில்லை.

சட்: எப்படி அவர்களை நீர் விபரிப்பீர்? - பொதுநிறம்.

சட்: ஒருவர் பொதுநிறம் என பொலிசுக்குக் கூறினீர்? -ஆம்.

சட்: இருவாக்குமூலங்களிலும் கூறினீர்? -ஆம்.

சட்: மற்றவர் என்ன நிறம்? -நல்ல சிவலை.

சட்: உம்மைவிடவா? (சிரிப்பு)

முதலாம் இரண்டாம் எதிரியைக் காட்டி இவர்களில் யார் சிவப்பு எனக்கேட்டபோது முதலாம் எதிரி சிவப்பென்ருர் சாட்சி.

சட்: 1975 ஒக்டோபர் 6ந் திகதி மல்லாகம் நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்பொன்று நடந்தது? -ஆம்.

சட்: அங்கு ஒருவரைக் காட்டி இவர் கத்தியால் பயமுறுத்திஞர் என்றீர்? -ஆம்.

சட்; அது உண்மையா? (மெளனம்)

சட்: கத்திவைத்திருந்தவர் மிரட்டிஞரா? -இல்லை

சட்: பின் ஏன் நீ வானு க்கு அப்படி பச்சைப்பொய் சொன்னீர்? -அப்படிக் கூறவில்லை.

நீதிபதி: கூறவில்லையா? கத்தி வைத்திருந்தார் என்றேன். மிரட்டியதாகக் கூறவில்லை.

நீதிபதி: இப்போது இங்கேயே கூறினீரே? நான் அப்படிக் கூறவில்லை.

சட்: பஸ்தியாம்பிள்ளை பொய் சொன்னுர், நான் பொய் சொன்னேன்' அல்லது நீர் பொய்சொன்னீர் என்று கூறும்' ஆனல் நீதிபதி பொய் சொல்கிருர் என்றுமட்டும் கூறவேண்டாம் தம்பி.

சட்; கத்தி வைத்திருந்தவர் இந்த ஐவரில் ஒருவரா? -இல்லை.

சட்; அப்பாவி மனிதர் ஒருவரை அப்படி அடையாளம் காட்டினீர்? -ஆம்.

சட்: தெரிந்துகொண்டே காட்டினீர்? -இல்லை.

சட்; 3 வருடங்களின் பின் 2ம் எதிரி கத்திவைத்திருந்ததாகக் கூறுகிறீர்? -ஆம்.

சட்: ஒக்டோபர் 3ந் தேதி கிங்ஸ்கவுசுக்கு கூட்டிச்சென்று முதலாம் எதிரியைக் காட்டித் தந்தார்கள்? இல்லை.

சட்: மல்லாகம் நீதிமன்ற அணிவகுப்பில் முதலாம் எதிரியை நீர் காட்டியதும் அவர் பஸ்தியாம்பிள்ளை தன்னை உமக்குக் காட்டித்தந்ததாக நீதவானிடம் முறையிட்டார்? -ஆம்.

சட்; பத்திரிகையில் எதிரிகள் சிலரைப் பிடித்திருப்பதாக செய்தி வந்தது? - ஆம்.

சட்; துரையப்பா வீட்டுக்கு அடிக்கடி பொலிசார் வந்தனர்? ஆம்.

சட்: யாராவது பிடிபட்டிருக்கிருர்களா என்று அவர்களிடம் கேட்டீரா? -இல்லை.

சட்: சில புகைப்படங்களை பொலிசார் காட்டிஞர்களா? -இல்லை.

சட்; நீர் கொழும்பில் தங்கியுள்ள விலாசம் இன்று உமக்குத் தெரியுமா? -ஆம்.

சட்: துரையப்பாவை துரத்தியவர்கள் உம்மிடம் வந்தபோதும் யோகநாதனைக் காணவில்லை. -இல்லை.

சட்: முதல்சூட்டுச் சத்தம் கேட்டதுமே உம்மைக் காப்பாற்றக் கடைக்குள் ஓடினீர்? -இல்லை.

சட்: கடையுள் இருந்து வெளியே நடப்பதைப் பார்க்க முடியாது? -இல்லை.

சட்; திரு. துரையப்பா மீதுள்ள விசுவாசத்தால் பொலிசார் சொல்லித்தந்தபடி 1ம், 2ம் எதிரிகளுக்கு எதிராக இங்கு சாட்சி கூறுகிறீர்? -இல்லை.

திரு. சிவசிதம்பரம் தனது குறுக்குவிசாரணையை முடித்ததும், 2ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி செருபிம் சாட்சியை குறுக்குவிசாரணை செய்தார். (ம)

## கடைக்குள்...

(1-ம் பக்கத் தொடர்சி)

மாநகரசபை உறுப்பினர் திரு. ராஜரத்தினம் காங்கிரஸ் கட்சியினராகவிருந்து திரு. துரையப்பாவுடன் சேர்ந்ததால் அவருக்கு அரசியல் எதிர்ப்பு இருந்தது என்றும் திரு. இராஜரத்தினத்தைச் சுட்டது திரு. துரையப்பாமீது விழுந்திருக்கலாம் என்று சட்டத்தரணி குறிப்பிட்டுக் கேட்ட போது சாட்சி சொல்லமுடியாது என்ருர். (ம)

## இன ஒற்று...

(-1ம் பக்கத தொடர்ச்சி)

தில் நாட்டில் அசம்பாவித சம்பவங்கள் தலை தூக்கி அநியாயமாக உயிர்கள் பலியாகின. பல தமிழ் மக்களை கத்தோலிக்க சிங்கள மக்கள் காப்பாற்றியுள்ளனர். இந்தச் சம்பவங்கள் மீண்டும் தலை தூக்காத வண்ணம் நாட்டில் இரு பெரும் இனங்களும் சுமுகமான உறவுடன் வாழவேண்டும். இதனையே நான் எப்பொழுதும் எனது பிரார்த்தனையில் சேர்த்துக்கொள்கின்றேன்'' என்று கூறினுர்.

யாழ். பேராயர் கலாநிதி தியோகுப்பிள்ளை தமது உரையில், ''இதுவரை எந்தப் பேராயருக்கும் இல்லாத சிறப்பை நாம் கொழும்பு பேராயரிடம் பார்க்கின்ருேம். காரணம், இவர் மட்டும்தான் மும்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவர். தமிழில் சிறப்பான முறையில் திருப்பலிப்பூசையை ஒப்புக்கொடுப்பதில் நாம் கண்ட பல பேராயர்களில் இவர் முன்நிற்கின்ருர்'' என்ருர்.

வடமாகாண கத்தோலிக்க ஐக்கிய சங்கத்தலைவரும் மன்னுர் பேரவைஉறுப்பினருமான திரு. எஸ். சூசைதாசன் பேசுகையில், மும்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற கொழும்பு பேராயர், நாட்டில் இரு இனங்களுக்குமிடையே ஒற்றுமை ஏற்பட பாடுபட்டு வருகின்ருர் என்றும், இவரின் தலைமையில், ஆண்டவரின் தூதுவனுக இப்பணியை இவர் நிறைவேற்ற ஆண்டவன் அருள்புரியவேண்டும்'' என்றும் கேட்டுக்கொண்டார்.

யாழ். மறை மாவட்டங்களின் சார்பில் பேராயர் கலாநிதி நீக்கிலஸ் மார்க்கஸ் பெர்னுண்டோவுக்கு வாழ்த்து மடல் வழங்கப்பட்டு, கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## வாளால் வெட்டிக் கொலை

(பேலியகொடை)

சந்திரபால என்பவர் நேற்று வாளால் வெட்டிக் கொலைசெய்யப்பட்டார். இது தொடர்பான சந்தேக நபர் நாணயக்கார தலைமறைவாகி விட்டாராம். (உ)


## மரண அறிவித்தல்

### இராஜசூரியர் S. K.

இளைப்பாறிய வைத்தியப் பரிசோதகர் (Divisional) பருத்தித்துறை வைத்திய காரியாலய மேற்பார்வையாளர் இராஜசூரியர் காலமானுர். அன்னரது பூதவுடல் சண்டிலிப்பாய், டச்வீதி, ''பூங்காவனம்'' இல்லத்திலிருந்து இன்று (6-7-78) மாலை 4-00 மணிக்கு மானிப்பாய் குடும்ப சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

9745

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா சரவணமுத்து

காலஞ்சென்ற காணிப்பதிவாளர் திரு. சி. சரவணமுத்துவின் பாரியார் திருமதி இராசம்மா காலமானுர். இவர் காலஞ்சென்ற திருமதி அன்னபூரணி, திரு. மகேசன் (இளைப்பாறிய மின்சாரப்பகுதி உத்தியோகஸ்தர்) திருமதி மகேஸ்வரி, திருமதி பரமேஸ்வரி, திருமதி லோகேஸ்வரி, திரு. லோகேஸ்வரன் (தொழிற்திணைக்களம், கொழும்பு), திருமதி இரத்தினேஸ்வரி ஆகியோரின் தாயாரும், திரு. திருநாவுக்கரசு (இளைப்பாறிய உதவி ஆலோசகர் கல்வித திணைக்களம்), திருமதி கௌரியம்மாள், காலஞ்சென்ற தபாலதிபர் திரு. ச. சுப்பிரமணியம், முன்னுள் சுந்தரம்ஸ் பற்றறி சேவிஸ் உரிமையாளர் காலஞ்சென்ற திரு. செ. சண்முகசுந்தரம், திரு. ச. செல்லத்துரை (பிரதம லிகிதர் தெமோதரகுறூப்)' திருமதி இந்திராணி, திரு. தியாகராஜா (இளைப்பாறிய தோட்ட சுப்ரிண்டன்) ஆகியோரின் மாமியாருமாவார். அன்னுரின் பூதவுடல் இன்று (6-7-78) வியாழக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு தகனக்கிரியைக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 392/2, இலக்க இல்லத்திலிருந்து கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

9751


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஜூலை மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No: 49, Jaffna - Telegram Eelanaadu-Telephone: 389 - Registered as a News paper in Sri Lanka